ஓம்

கலியாணபுருஷாயநம:



# கலியாணப்பாட்டுகள்.

இஃது

ஆழ்வார்திருநகரி

**நா. ரா. நாராயணையர்**

அவர்களால் இயற்றப்பட்டு,

ஷெயாரவர்களால்,

திருநெல்வேலி

ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

[ரிஜிஸ்டர்.

O-,1MNN,4
N23
180853

ஓம்

கலியாண புருஷாயநம:



# கலியாணப்பாட்டுகள்.

## சரஸ்வதிஸ்தோத்திரம்

[கார்க்கநீ வருவாயே]

தேவியேவருவாயே சரஸ்வதி செந்தமிழ் அருள்வாயே.

சரணங்கள் —

தண்டைசிலம்பு ஆர்ப்ப தயையுடன் என்னைநாடி தந்தருள் நற்கீதமே யிப்போதே (தேவியே) பெற்றதாயே யுன்னைபிரார்த்திக்கிறே னுண்மை உற்ற என்னுதருடன் காணுட (தேவியே)

---

கண்ணன்மேல் துதி, பொன்னார்மேனியனே,

கண்ணுக்கருமுகிலே யென்றும் கருணையைப் பொழிந்தருளே கண்ணு விண்ணே விண்ணிலொளி வேழமே கார்த்தவனே. [க] பண்ணாரிசை தனையே பாடவே யென்தனக்கு - புண்யா இது வேளையே புகழிசையீந் தருள்வாய் [உ] எல்லா ஐஸ்வரியம் மற்றும் இசைவாம் நற்றுணையும் நல்லோர் நட்பினையும் நாளுமே யீந்தருள்வாய் [ரு] கல்லேனுனுலுமே கருணித்து என்தனையே வல்லதேவனேநீ மகிழிசை யீந்தருள்வாய் [ச]

---

நாட்டுச்சிறப்பு நொண்டிச்சிந்து.

நீர்வளம் நிலவளங்கள், நிறைந்து நேர்த்தியா யுயர்ந்தது நமதிந்தியா- கார்மேகந்தனைக்கூட்டும், நல்ல கற்பகத்தருக்களடர் வளஞ்சோலை [க] ஊடே ஓடைகளாம், அதிலே ஒளிதருமீனினங்கள் உவந்தாடும்,பாடும் இளிகுயில்கள், மேய்ந்துப் பசுவினம் யாவுமே பால்தருமே, எல்லாவள முளதே.

---

காப்பி ரயிட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.
22—3—1923,

நா. ரா. நாராயணராயர்
ஆழ்வார்திருநகரி

நகர் சிறப்பு கேதாரம் ஆதிதாளம்:—

என்னஅழகு இந்த நகர்-சுந்திரமானதோர் நந்தவனம் நிறை இந்திர லுடும் பொன்னகரிதுவே [எ] மாடமாளிகை கூடகோபுரம் சேடஅரி தான காட்சி கல்கிடும் [என்ன] சகலகலைகளும் சகலபோகமும் வகை வகையானவ வளமைகள் பூண்டதுவே [என்ன]

---

180853

மண மேடை நாதநாமக்கிரியை ஆதிதாளம்;—

என்ன அழகு இந்தமேடை அன்னமே சொர்ணமே அளவிடப்போமோ? [சரணங்கள்] வாழைக்குலையுடன் மாவிலையொடு மிகதிரி, தாழையீந்து நல்லத்தாமரைச்சுமுகம், மாழை வண்ணப்பட்டு மயிலினற்றேசை, ஆழி யிலீட்டிய ஆணிமுத்தொளியும் [என்ன] முத்துநல்லாரம் எத்திசை யிட்டு, சித்ரவிசித்திர மாம் படலங்களிட்டு. லஸ்தர் குளோபுடன் விளக் குகளிட்டு, சித்தஜன் ரதிமார் எத்தினம் நாடும் [என்ன] கந்தகஸ்தூரி புனுகுடனத்தர், சிந்தைமகிழ்மலர் செண்பகரோஜா. பந்துஹார பான் சுபாரிலவங்கம், செந்தமிழ்ராயன் இசையொலிகிதம். [என்ன]

---

பாலைவாய்க்கழகில்:— வண்ணமிட்டக் கால்கள்நட்டு, வான மெட்டுமேடையிட்டு, வாசவன் கோயிலெனப் பேசிடும், நல்ல வாசமல ரெங்கிலுமே வீசிடும் [க] மந்தமானத் தென்றல்காற்று-அந்தமாகவீசுவு தால் இந்திரபோகமதனையே கூட்டிடும். நம் சிந்தைமகிழ் நற்புகழு நாட்டிடுமே [உ] பாவலரும் பூவலரும், ஆவலோடுமேவிவந்துப்பாடிடவே பாலமுத மூறிடும், கேட்டுப் பைங்கிளியும் குயிலினமும் கூடிடும். [ஙு]

—○—

என்னடி நான்பெற்றமங்கை:— வண்ணச் சோலையெங்கும்பல ஓடை, மலர்வாடை, இந்தமேடை, என்றுமேயில்லைபார்கோடை, அதில் அழகாகிய பறவைபல அழகாகவே தானீந்தி ஆடுதுபாரடி பலபேடை பார்த்துப் பாடுதுமென்குயில் காடை [க] இந்தவிதநல்ல காட்சி, வன ஜாக்ஷி, புண்ணியாட்சி, ரதியவளுடைய ஆட்சி, அந்தா மதுவேசிறை களியானவை இதமாகவே அலகாலேயே கொடுப்பதைப்பாரடி சாய்ச்சி, மலர்க்கமென் மீதிலோச்சி [உ] சத்நகசிகமேடை பாராய், இங்குவாராய் மிகஆராய் ஈடேது இதற்கெவைநேராய், கதிர் மணியே நிறைதல மீதினில் அணியேயணியரும்பாவையே, வந்தென்னைக்கட்டிச்சேராய் அதால் காமியநாளும்களிகூராய்.

—○—

கனவு. தென்னுதமிழக்குதவு;— உற்றதோரென்னருமை தோழி, நானுரைப்பதை முற்றுமேநீ கேளு, முன் சற்றுமேபார்த்திராத

சுவந்திரநல்வடிவன் கண்டான் மனங்கொண்டான். [க] என்னவெனக் கனைகளையே திறந்தேன், அதை யிசைவானக்கனவென அறிந்தேன், இப்போ என்னபலன் கூடுமென இசைவாக நீயெடுத்துச் சொல்லாய் துதிநல்லாய். [உ] வயதுக்குமேத்ததனவுந்தனினவே, பின் வரு வலைத் தந்ததேடியனமே, நின்னயமான பொற்குணமே நல்லதோர் நற்றுணையைக் கூட்டும், இன்பம் ஊட்டும். [௩]

—O—

தூது. தோடி ஆதிதாளம்;— அழைத்துவருவாய் சகியே என்னுயிர்நாதனை இக்ஷணமேகோடி [அழைத்து] திண்ணமாம் மார் புடையான் சீராளனெந்தனுதன், பண்டுசெய்த புண்ணியத்தால் பார் வையிட்டான், கண்டதோர் நேரமாகக் காமக்கணையிற்சிக்கிப் பெண்ணொ ருத்திராணிங்கே, வருந்துவதாகச் சொல்லி. [அழைத்து] வாடுமோர் பயிர்க்கு வான்மழை யவராவர் தேடு பூங்கொடிக்கோர் தேமாவேயிவரா வர்பாடுமோர் இன்னிசைக்கு பண்ணிவர்தானுவர், கோடிக்கோடியாய் கும்பிடுமேவதாக [அழைத்து]

—●—

காம்போதி ஆதிதாளம்:— தண்டனிட்டே னென்றுசொல்லடி தயைபரிபூரணராம் நாதரிடமேயோடி-செண்டுமலராரந்தன்னை சிந்தை மகிழுயிக்கு தீவிரமாய் நலுங்கிட வரவேணு மென்பதாக [தண்டன்] நிமிஷமொரு வருஷமாய் நினைந்துவாடுறேனென்று நேமமாகப்பணிந்து நீதயையுடனே—சமயமிதுவென்று சாந்தமா யுரையாடி தற்கார்த்திடும் வண்ணம் க்ஷணத்திலே விரைந்து [தண்டன்]

—O—

ஷ[illegible]கனைக்காணுமல்:— சுந்தரனைக்காணுமல் சிந்தையுங்கலங் குது—வ[illegible]னம் தந்திப்போ வரவழையாய்யானே [க] அன்னமுமேசர வில்லை ஆயிழைக்கேளடி மன்னவரையிப்போ மகிழ்வுடன்சேர்ப்பாய்[உ] சந்தனம் காந்துமோ சாந்திநீசொல்லடி செந்தமிழ் ராயன்கீதை செம் மையாய்ப்பாடி. [௩]

—●—

எதிர்கொண்டு உபசரித்தல் தோந்திசரிய வயிறே;— வந்தருளென தருகே, துதிபெருகும் சுந்திரமிகவடிவா எனதுடலைத் தக்குநிலயமது வாய் விரைவினிலே என்னைநாடி. [க] வல்வினையறுபவனே அனுதின மும் கொஞ்சமுமெனையகலா முறையின்வழி தஞ்சநிலையைப் பதிவாய் மகிழுறவே இணையாக. [உ] மந்திரம் எதுவுமில்லையே நினையளவு தந் திரவழியறியேன் அறநெறியில் கொண்டெனையதி நலமாய் வழுவறவே நடைகூட்டாய். [௩]

கலியாணி ரூபகம்:— வருவீரே எந்தனினதா இப்போதே வந்தென்னைக்காப்பீரே—இருகாலையுறுதியாய் இணையாகப் பிடித்தேனே [வருவீரே] கும்பிடப்போன தெய்வமும் முன்னிங்கே குறுக்கிட்டானாற்போலே—அம்புவிபுகழ் மன்னு அடியாளிடமே நாடி. [வருவீரே] என்னபாக்கியம் செய்தேனுன் இங்கும்மை இசைவாகக் கண்டுநின்றேனே இன்னிசை ராயனேய எடுத்தாளும் இதுவேளை. [வருவீரே]

—◉—

நோண்டிச்சிந்து:— வந்தோடிவீற்றிருங்கள் இந்த மணிமயஆசனத்திலமர்ந்திருங்கள்—எந்தன் பெரும்பாக்கியம் இது எவருக்கும் கிட்டாதோர் மிகசிலாக்கியம் [க] நல்லமலர்வாடை எங்கும்காடியே வீசிய துமகிழ்வீயும்—எல்லாப் பெரியோர்கள் நம்மை இங்கிதமாய் வாழ்த்து கூற ஆடிடுவோம் வந்து வீற்றிருங்கள்.

—○—

நமஸ்கரித்தல் பைரவி ரூபகம்;— சுந்தரமூர்த்திநமோ சுத்தசொரூபா நமோ சற்குணமார்பா நமோ சாந்தநற்குண நமோ [க] அன்பாநின் தாளினை அடைக்கலம் புகுந்தேனே-இன்பமா யெனைக்கூடி இனியதேதந்தருள் [உ] கற்றவர் விரும்பிடும் கல்பதருவேநமோ உற்ற துணையைநல்கி உவந்தருள்வீரிங்கு [ங]

—◉—

ஊஞ்சல் நீலாம்புரி ஆதி சாப்பு;— வாசனைகல்வர்த்தி வாசலெங்கும் சென்றுலவ ஆடீரூஞ்சல், நேசமிகு மென்னுதா நேமமுடனிரமர்ந்து [ஆடீர்] மதுரமொழி அவைதனல் மகிழ்வாகப் பாடுவேன் [ஆடீர்] பதியே உமக்குநான் பதசேவை நான்செய்வேன் [ஆடீர்] பெரியோர்கவாசிகூற சிறியார்தாமகிழ [ஆடீர்] உதவியாய் நற்றுணையை உதவுவீரென்றுமே. [ஆடீர்]

—○—

சம்பாஷித்தல் ஆனந்தபைரவி ஆதிதாளம்;— ரங்கநாத எங்கே போனீரோ நீரெங்கேபோனீரோ எங்கேபோனீரிந்தநேரம் இங்கேவந்து நில்லுமையா சங்கீதங்கள் பாடிடுவோம் சரசங்கள் செய்திடுவோம் [ரெங்கநாத] தஞ்சமென்று வந்தவளைக் கொஞ்சமேனு மிரங்குதீர் அஞ்சலென்ற பயத்தை அருள்வீரே யிப்போதேநீர் [ரெங்கநாத]

—◉—

ஆசையறிவித்தல் ஆண்டிபண்டாரம்;— ஆண்டகையோனே வும்மை வேண்டிக்கொண்டேனே [சரணங்கள்] ராவும்பகலுமும்மை எண்ணியே வாடினேனே தேவேநீ யென்னைக்கூட திருஅருளை பொழிந்திடுவீர் [ஆண்ட] வீதியில் வீடுகளில் வெளியிலே காணுநேரம் நீதனே

உம்முருவம் நெஞ்செங்கும் பதிந்ததையா. [ஆண்ட] அடைக்கலம் நானுமக்கு ஆருயிர் நீரெமக்கு தடையாது செய்யாமலே தயைநாளும் புரிந்தருள்வீர் [ஆண்ட]

—o—

நலுங்கிட அழைத்தல் புரோவசமயா;— தருணமிதுவே தயவு செய்யுமையா தாரணிமன்னு சகலசம்பன்னனே--விரைவினிலோடி விரும்பியென்னைக்காக்க வேளையிதுவே வேந்தனே கேளீர் [தருண] மந்தமாருதம் அந்தமாய்வீசுது மனமகிழ்ந்திங்கே நன்றா யாடுவோம்— இந்தவேளையேயென்னை நாடியேஇரக்குவீரய்ய ராயனின்நேயா [தரு]

மாதாடபாரநேனே;— நாதனே வந்தருள்வாய் என்னையேநாடி நாதனேவந்தருள்வாய்—நீதனேவந்திங்கு நேர்மையாய் நீசேர்டி [நாத] பூமாலையவைவந்து போதுகளாச்சுதே-பூமானே இப்போது பூரணதயை செய்வாய் [நாதனே] பெரியோர்களாசிகூற சிறியார்கள் களித்தாட உரிமையாய் ராயனேய உல்லாசமாயோடி [நாதனே] 180853

—●—

ஐயங்காரே ஐயங்காரே;— நலுங்கிட வாருமையா நாளிகை தானுதையா பலமுறைத்தேடியுமே பாராததென்னவையா [ந] அத்தரும் பன்னீருமே சித்தமாகஇருக்குதையா உத்தமனே நானுமக்கு இத்தருணம் நான்தெளிப்பேன் [நலுங்கிட] சிங்கார கொண்டு நானு சிந்திசுதா இத்தேனையா அங்கவுநோகுதே ரங்காவேலாபாகபாரோ [நலுங்கிட] மல்யாலு மல்யாலு மருவுமன்சிதவனமுதே நிலபுகொன்னுனு ஐய்யா நீரஜதளநயநா [நலுங்கிட] ஸேயூ அன் கிஸ்யூஎவர்ஸ்டாண்டிங் ஆல் வேஸ் ஹியர் கம் அன் மேக் மீ மெரி வொய் யே டாரி ரெங்கா [நலுங்]

—o—

ஸ்ரீராமஜயஜய;- அமலாநீர்வாரும் அடிமலரைத்தாரும் பவளநன் மஞ்சள் பணிந்துநானிடுவேன் [ந] வில்லை சேர்த்தரை வேண்டியன சேர்த்து-வல்லவா நற்கந்தம் மகிழ்வாகச் சேர்ப்பேன் [உ] பெற்றவர் பெயரேந்தும் பேரழகானுனுமக்கு-உற்றநல்லாரம் உவப்பாகணிவேன்[]

—o—

மஞ்சள் பூசல் கமாஸ் ஆதிதாளம்;— மஞ்சளைப்பூசுவேன் நாதா மலரடியிலைதாரீர் மஞ்சளைப்பூசுவேன்--கெஞ்சியே உம்மைநான் கொஞ்சியே வேண்டுகிறேன் கிருபைதனையீந்து கேட்டருள்புரிகுவீர்[ம] என்னைக் காக்கவந்தபதம் இனியவைஞாளும் செய்யும் என்னைக்காக்கவந்தபதம் மன்னனே யிப்போது மகிழ்பூசை இந்நேரம் இன்னிசையைப்பாடி யேற்றியேதுதிப்பேனுன் [மஞ்சளை]

—o—

வண்ணமஞ்சள் வரைதல் நீயேபுரைப்பாய்;- வண்ணமஞ்சளை வரைவேன் அண்ணலே எந்தனகமதுகளிக்க அழகாக இங்குநான் [வ] ஏடுண்டோஜகத்தில் உம்மடியித்தருமோர் ஏடுண்டோஜகத்தில் பாடிப்புகழ்ந்துநான் பலசித்திரம் தீட்டுவேன் ஊடல்வளர்த்திடும் ஓர்முறையிது கேள் [வண்ண] வாசனைகூட்டியித்னை என்றுதை நேசமுடனிங்கே வரைவேன் கூசாமல்கொடுத்திடும் குணமானபாதத்தை ஆசைவளர நான் பூசைசெய்குவேன். [வண்ண]

—●—

சந்தனம் பூசல் (வந்தாரோ சீதை யிங்கு)

தாரீரே மலர்க்கையை யிங்கு நாதனே யென்னிடம தயவுடன் கூடியே (தாரீரே.) சந்தனம் பன்னீரை பரிமளம் தருமாம் ஜவாதுடனல்ல வில்லை, அந்தக்தளவில் அழகாகவே சேர்த்து, சுந்திராவுய்யாரா சொல்லுவேன் கேளாயிப்போ யந்தமுடனே கந்தம் அள்ளி யள்ளி விட்டு, சிந்தை மகிழ்வுறச்செழ்மையே கூட்டி, உன் தன் மெயினில் என் தன் கையூற (தாரீரே) விரலிடை விரலையீந்து என்தன் விரகமும் தீர்த்தருள் மெய்யா, விரியாரபில் வெள்ளமே பெய்து வேந்தனே நானும் மெய்பிணைத்தழுவி மனம் கருதியவண்ணமே களிப்பினை யூர்ந்து, மிரளுமோரென்னிலே அமைதியை எய்திட தருணமிதுவது தயைபொழிந்தருள் நீர் (தாரீரே)

—O—

பொட்டிடல் (கும்மிமெட்டு.) ஜவ்வாது நற்பொட்டு சந்தோஷமிடுவேன் தர்மரே எனக்கு இடம் அருள்வீர் — ஒவ்வாத காரியம் எதுமே செய்யினும் உத்தம என்னை நீர் மன்னிப்பீரே.

—[o]—

விசிறுதல் மோகனம் ரூபகம்:— வீசிரி வீசுவேனுதனே என்றும் நீர் எளியாளைக் காத்தருள்வீர், திசைபுகழண்ணலே நின் திருவருள் பொழிகுவாய்த் தெண்டனிட்டு வும்மை தினமுமே பணிகுவேன்(விசிறி) சின்னஞ் சிறுவளே யான் இப்போ செய்காரியமேதுமறியேன் மன்னவரே யென்னை மன்னித்தருளல்வேண்டும் மலரடி யிணைகளை மறவாமல் தொழுவனே (விசிரி.)

—O—

செண்டாடல் (இங்கிலிஷ்நோட்டு) ஆதிதாளம்;— தீரா வீரா வந்தருள்வீர் தேன் மலப்பந்தை யாடிடுவோம், சீராயிதனை மேவியேந்தியே ஆசை பூட்டிடக் கேள் கேள் கேள் [க] மல்லிகை ரோஜா மருக்கொழுந்து மணங்கொளுமிந்த நல்ல பந்து. மெள்ள எந்தி என்னை யுணையும்

விதமே காட்டிடத் தேர் தேர் தேர் [உ] இனியதாம்கீதம் நாம்பாடி நாமிருவரும் ஒன்ருய் நாள் கூடி பாரும் என்னை நீர், காரும் எந்நாளும் சரண் புகுந்த என்தனிடம். (ரு)

—O—

செண்ட்லேத்தாடனே எந்தி சாடுதீர் பந்தையிங்கே போடுதீர் மாங்கருள் முதல்வனே மாரனே சூரனே மனமது மகிழ்ந்திட [எந்தி] இந்த வேளையே நல்ல எற்றவேளையே சிந்தை மகிழ்ந்து நீ நன்ருக எந்தியே விந்தை விந்தையாய் விசவிதமாக [எந்தி] பூவின் மணம்போல் பசும்பொன்னினெளிபோல் பூவி மீதிலே நாமிருவரும் பொருந்திவாழ்ந்து இன்ப நுகர்வோம், [எந்தி]

—O—

முத்துக்குமரய்யனே;- செண்டையெடுத்து ஆடிதீர் என்தனுதயிங்கு [செண்டை] வண்டு ஓதிடும் துண்டு மல்லிகை யிதைப்பாரீர், மகிழ்ந்து வருவதைக் காணீர் வரையாம் கைதனைத்தாரீர் பந்தைப் போடீர் [செண்டை] ஈசனேச என்னிடமே க்ருபைகூர்ந்து இந்த நல்ல பந்தையே தந்து இசை தாதுஆக நன்கமைந்து இன்பமீதலே நன்று [செண்டை] ஆட ஆட இது ஆசையூட்டுதே பாரீர் அன்பை விளக்குதே தேரீர் அருளைக்கொஞ்சம் சேரீர் என்னைக்கூடீர்.

—(o)—

தேங்காய் யுருட்டல் (பித்தாபிலாகுடி) மன்னனே இது நேரம் மகிழ் தேங்காய் நாமுருட்டி மகிழ்தேங்காய் நாமுருட்டி மாண்புடன் புவிதன்னிலே சுகமாக வாழ்வோம் (க) பார்மீதிலிவ்வாட்டம் பலன்தருமே பாரீர் நாள் பலன்தருமே பாரீர் பற்றெல்லாம் தான்கூட்டி பார்போற்ற வைக்கும் (உ) நம்முள்ளாக்கியம் நாளோங்கத் தான்செய்து நன்மையே நாளுமே நயமாகத் தருமே (ச)

---

பூடுவேனேனைய்ய. தேங்காய் உருட்டினுள் தேன்மொழியாள் தேங்காயுருட்டினுள்.

சரணங்கள்-

கணவன்மேலே கடைக்கண்ணிட்டு கருத்தில்கொள்ளா களிப்படைந்து கண்ணூல வண்ணனிடமே கவனமெல்லாம் செல்லவிட்டு (க) கண்டமத்தியில் கனகப்பந்தைக் கையினுலே தானிறத்திக் கணவன் ஸ்பரிசம் கனூயுற்று களித்துக்களித்து மனமகிழ்ந்து (உ)

பத்தியம்;— மந்தஹாசலோலனே மணிமயமார்பனே மன்மதாகாரனே யுய்யாரனே, சுந்தராங்க வுன்னைநான் கண்டதோர்நேரமாய் சொக்கியே வாடியே மெலியலானேன், அந்தரங்கமாகவே என்னுடலாவியும், அணுணம் கலந்ததே உம்மிடத்தே, விந்தையையேதென்று விரித்துநான் சொல்லுவேன் விருப்பமும் கைகூடி மகிழலானேன் [முடுகு] சுந்திரா நான் தரும் தளிரிலை நற்பாக்கை. துரிதமாயேற்றிங்கு நீருளல்வேண்டும், துணையாகவும்மடியைப்பற்றினேன் என்றென்றுமே (க) படியாதவளானாலும் படித்தவா நீரென்னைப் பாங்காக நாளுமே நடத்திவைப்பீர், அடியாளாய்ச்செய்யுமோர் அலுவலாம் இவைகளில் அதிகமாய்க் குறைகளே அமைந்திருக்கும், தடையேதும் செய்யாமல் யிக்ஷணம் நீர் பொறுத்து தயையொன்றை எப்போதும் அருளல்வேண்டும், அடிக்கடி யுமக்குநான் அறிவித்தல் தேவையே அன்பனே நண்பனே யெடுத்துச் சொல்வீர் [முடுகு] இடையரு இன்பத்தை என்றுமதரல்வேண்டும், என்னுயிர்தன்னை ரட்சிக்கவேண்டும், இசைவாக நீரும், நானும் வாழவேண்டும்.

—(0)—

தாம்பூலம் ஈதல் மோகனம் ஆதிதாளம்;— 'தாம்பூலம் தரித்தருள்வீர் நாதாயிப்போ தயைபுரிந்தருள்வீர் [முடுகு] ஆம்பல வாசனை யள வுடன் சேர்த்து அன்பனே யின்பமா யிந்நேரமிங்கு [தாம்பூலம்] இளந்தளிரிவ்விலையைப்பாரீர் நமக்கென்றும் இன்பமேயூட்டும் தேரீர், உள மகிழ்ந்தெனைக்கேளீர் உவப்புடன் வந்து நீராவீர், கனியாட்டம் ஆடுவோமே வாரீர் கருணையைத்தாரீர் நும்பொன்னடியதனை யெந்நேரம் போற்றின்னிசையாலே நாளுமே துதிப்பேன், [தாம்பூலம்]

—O—

மங்களம் சுருட்டிரூபகம்:— மங்களம் ஜயமங்களம் என்னுயிர்நாதர்க்கு மங்களம் ஜயமங்களம். [சரணங்கள்] சாந்தமாம் சீலர்க்கு சர்வ சம்பன்னர்க்கு ஆந்துணையாகி நாள்அருள்மழை பொழிவார்க்கு [மங்கள] இனியவை செய்வார்க்கு இணைபிரியாருக்குகனிமொழிராயனேயன் கடிமலர்ப்பதங்கட்கு [மங்களம்.]

—O—

பிழைகளை மன்னிக்கவேண்டல் மலடிவயிற்று மகன் போல கற்கக் கரியக்கலையைக்கற்று, மக்கட்குள்ளே மாண்புகளுற்று, திக்குக்கெல்லாம் தேர்ச்சிகளுற்றத் திரள்தோளா (க) சாற்றற்கரிய சாந்தமும்தயையும் போற்றற்குரிய புகழும் செல்வமும் ஏற்றற்குரிய எழிலுடன்தோன்

றிய மணவாளா (உ) அரும்பெருமானே யடியாட்கெளியாய் பெருங் குறையாவும் புறந்தனில் நீக்காய், கருணையைத் தந்தெனை காத்தருள் வாயே இதுவேளை.

—o—

விருத்தம்:— சிறியவளாய்ச் செம்மை யில்லாளாய்த் தெரிந்தும் தெரியாமலும் செய்த்த் குறைகளாவுமே நீர் பொறுத்துக் குணமொன்றையே புரியவேணும், அறிவுடையாயருளுடையா யடியாளிடம் அன்பு கூர்ந்து, பெறுதற்குறிய நல்லின்பந்தனைப் பேரழகா னளித்துபேதையை ரக்ஷித்தருளல்வேண்டும்.

—o—

கப்பல்பாட்டு;— ஏலேலோ எலயேலோ இங்கிதமாம் நல்லகப்பல், மேலான விஸ்வகர்மா மேன்மையாகத்தானியற்றி, வேலையிலே தாம் சிறந்தார் விதவிதமேதாமகிழக் கோலாலமாகக் கூட்டிக் குணமுடனே தாமமைக்க [முடுகு] தேவர்கள் மூவர்கள் திருவருள் ஏந்தி திருமணக்குறிப்புகள் திசைதோறும் ஈந்து, அழகான பண்டமும் பொருள்களும் சேர்த்து, அம்பிகையருளை எளிதினில் கொண்டு, மஞ்சளோடு குங்குமம் மலை மலையாயிட்டு, மல்லிகை ரோஜாவாம் மலர்வகைக்கூட்டி விதவிதபொற்புடவை மேலான ரவிக்கை, மேலான சந்தனம் மிகுந்தொரு பன்னீர், கொஞ்சுமொழிக்கிள்ளையர் குணமுடன் கூடி, குணமான ஆடவர் கோலாலமாகி, பாத்திர பாண்டமும் பல்வேறு தினுசாய், பழவகையாவுமே பாங்காகக்கூட்டி, பக்ஷணம் தின்பண்டம் பலவாக ஏற்றி, பாக்குடன் வெற்றிலைப் பத்திரி நல் ஏலம், அவனியிலுள்ளார்கள் அதிசயிக்கும்வண்ணம், அழகாக அரைவர் ஆசனம் அமர்ந்து, நவரத்னமயமான நகைகளைப்பூண்டு, நகை முகக்காமினிகள் நாற்றிசையுமமர்ந்து பாவலர் நாவலர் பல்லாயிரம் பேர், பக்துக்கள் மித்திரர் பல்கோடி பேர்கள், விற்பனர் வேதியர் வேலைகள் செய்வோர், விதூஷகன் கனபாட்டி வேடிக்கை செய்வோர், வீரர்கள் மல்லர்கள் வீரியமேகலந்து, தீரர்கள் பக்தர்கள் தேசாபிமானி பத்திரிகைப்போடுவோர் பாங்காகப்பேசுவோர் எல்லாரும் நன்றாக இசைவாக அமர்ந்து நல்லதோர் நாளிகையில் நம் கப்பல் செல்ல, அரிவி சுனைகளில் அன்னங்கள் கூட்டம், அழகான மீன்களும் அற்புதக்காட்சி, ஆங்காங்கு மானினம் அகமகிழ்ந்து பார்க்க ஆவினம் மாவினம் ஆசையுடன் பார்க்க, மாணிக்க மாகதக்குன்றுகளைத் தாண்டி ஆங்காங்கு துறைகளில் ஆங்காங்கு நின்று ஆங்குள்ள பேர்களையும் பொருள்களையும் ஏற்று, உலகத்தில் இல்லாத ஒவ்வொரு பொருளும் ஒப்பற்றவிதமாக ஒன்றாகக் கூட்டி, நிலமகளும் பூமகளும் நேமமாய்

வாழ்க்க, சேர்த்தியாம் கலியாணபுரிதனையனுதிவேடிக்கை மத்தாப்பு விதவிதமாய் நடக்க, நாதசுரம் துந்துபி நாதமொடு கேட்க, அக்கனு மணிகளும் ஆரதியேந்த குறித்த நேர் வேளையில் குணமுடன் சேர, மங்கள வாழ்த்துகள் மங்கையர்பாட, சிறப்பாகத் திருமணத்துறைதனை யடைய— ஏலேலோ ஏல ஏலோ.

—○—

பள்ளியறைப்பாட்டு தோகையே கிள்ளையே துதிகொள்ளும் புள்ளியேமோகனவுய்யாரி இங்கு மொழிதருவாய் நன்கு (௧) மின்னலே கொடியே மேனகை ரம்பையே— அன்னமே இதுவேளை ஆதரித்தாளாயே (௨) மவுனித்திருப்பதென்ன மங்கை நீ சொல்லடியே— கவர்ச்சி செய் கலவை பெண்ணே களிப்புடனீவாய் கண்ணே (௩) வேடபட்ட மானைப்போல பிரமித்திருப்பதென்ன உடனே இதுவேளை மானே ஒரு முத்தம் தருவாய் தேனே (௪) கமலமென்றிருந்தால் கதிரவன் வேண்டாவோ விமலையே இதன் பொருள் தெளிவாயறிவாய் [௫] கரும்பு தின்னக் கூலியுண்டோ கனிமொழியே யுரை விரும்பிய என்னை நீ வெறுத்திடவே செய்யேல் (௬) மல்லிகைக் கொடியதோ மாமரம் தழுவியே நல்லதோர் நிலை நயமாக ஈருதே (௭) கஸ்தூரி திலகமும் கரைந்துதானோடுதே விஸ்தாரநெற்றியை மூத்தே விளக்குவாயே சற்றே (௮) ஓரிமைப்போதிது ஓர் யுகம் தோணுதே சேரிழையே இப்போ நீடுவாய் கரத்தை (௯) நல்லதோர் முகூர்த்தமிது நன்மை ஈவது வல்லியே இந்நேரம் மகிழ்வதே சாரம் (௰) வேர்வையாம் இந்நேரம் மேலாடை எதுக்கடி நேர்மையே மெய்காட்டி நீதருதலே. கண்மாட்டு (௰௧) அச்சமும் தவிர்ப்பாய் அதரமும் அளிப்பாய் மெச்சுராயன்கீதம் விவரமே நடப்பாய்.

முற்றுபெற்றது

